Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 21 | ஆகஸ்டு 2015 | கானம் : 1



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Nethaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

# மதுரமுரளி

MADHURA MURALI

Rs.15/-

ஆண்டு சந்தா ரூ.180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை



வேணு : 21 | ஆகஸ்டு 2015 | கானம் : 1

Delivered by India Post www.indiapost.gov.in



ஆஷாட ஏகாதசி - ஜூலை 27
விட்டலாபுரம் ஸ்ரீபாண்டுரங்கன் சன்னதியில்





ஜூலை 10,11,12 - மலேசியா நாமத்வாரில் "மதுர உற்சவம்"
- "மதுரஸ்மரணம்" My Guru As I SEE HIM - பாக்யநாதன்ஜி



காகிதமலர்கள் - 2 - நூல் வெளியீடு
By 'Datin Paduka' Mother Mangalam - Pure Life Society

ஸ்ரீஹரி:

மதுரபுரி பாகவத பவனத்தில் எழுந்தருளியிருக்கும்

## ஸ்ரீமாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு

இருபத்தி இரண்டாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

| | | | |
|---|---|---|---|
| 5.9.2015 | சனி | இரவு | நந்தோத்ஸவம் |
| | | | ஹம்ஸ வாஹனம் |
| 6.9.2015 | ஞாயிறு | மாலை | சேஷ வாஹனம் |
| 7.9.2015 | திங்கள் | மாலை | ஸிம்ஹ வாஹனம் |
| 8.9.2015 | செவ்வாய் | மாலை | புன்னை மர வாஹனம் |
| 9.9.2015 | புதன் | காலை | ஏகாதசி |
| | | | விசேஷ திருமஞ்சனம் |
| | | மாலை | கருட சேவை |
| 10.9.2015 | வியாழன் | காலை | துவாதசி |
| | | | ஸ்ரீ கோவிந்த பட்டாபிஷேகம் |
| | | மாலை | யானை வாஹனம் |
| 11.9.2015 | வெள்ளி | மாலை | நிகுஞ்சோத்ஸவம் |
| 12.9.2015 | சனி | மாலை | ஜானவாஸம் |
| | | | நாதஸ்வரம் கடலூர் |
| | | | ஸ்ரீபாலசந்தர் & |
| | | | ஸ்ரீபாலமுருகன் குழுவினர் |
| 13.9.2015 | ஞாயிறு | காலை | ஸ்ரீராதாகல்யாணம் |
| | | மாலை | தெப்போத்ஸவம் |
| 14.9.2015 | திங்கள் | காலை | ரதோத்ஸவம், விடையாற்றி |

பாகவதோத்தமர்கள் அனைவரும் வந்திருந்து கதாஸ்ரவணம், நாமசங்கீர்த்தனம் மற்றும் உத்ஸவ வைபவங்களில் கலந்து கொண்டு, ஸ்ரீபகவத் க்ருபைக்கும், குரு க்ருபைக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு


மதுரபுரி

மஹாரண்யம்

ஆஷாட ஏகாதசி

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி






சிங்கப்பூர் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் கோவில் PGP ஹாலில்
மஹாமந்திர சத்சங்கம் - ஜூலை 18, 19 - பாக்யநாதன்ஜி









ஜூலை 18 கோவிந்தபுரம்
ஜகன்னாதர் ரத யாத்திரை



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 ஆகஸ்டு 2015 கானம்: 1

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-233 | 06 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 |
| பாகவத பழம்- ஸ்க 2/27 | 12 |
| புருஷோத்தம மாத சத்சங்கம் | 15 |
| ஒலியும் ஒளியும் | 17 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| சனாதன கோஸ்வாமி | 26 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 28 |
| ப்ருந்தாவன கண்ணன் | 33 |
| மாலே மணிவண்ணா | 35 |


நிர்குணமப்யநுரக்தம் ப்ராயோ
ந ஸமாச்ரிதம் ஜஹதி ஸந்த:
ஸஹவ்ருத்திக்ஷயபாஜம் வஹதி
ஸஸாங்க: கலங்கமபி:

குணமில்லாதவனாக இருந்தாலும், பெரியோர்கள் தன்னை அண்டியவனை கைவிட மாட்டார்கள். சந்திரன் தன்னுடன் கூடவே வளருவது தேய்வது என்ற சுபாவமுள்ள களங்கத்தை விடுகிறானா?

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: தன்யாசி தாளம்: ஆதி

பகவன் நாம சித்தாந்தம் செய்த
போதேந்திர குருவிற்கு நமோ நமோ (பகவன் ..)

முக்தி தரும் காஞ்சியில் அவதரித்த
மோஹன மூர்த்திக்கு நமோ நமோ (பகவன் ..)

சுகுணா தேவி சுந்தர புதல்வன்
இந்திர சரஸ்வதிக்கு நமோ நமோ (பகவன் ..)

ஆத்ம போதேந்திரரின் ஆப்த சிஷ்யராம்
ஆனந்த மூர்த்திக்கு நமோ நமோ (பகவன் ..)

ஞான சாகரனின் ஆத்ம சகா
ஞான வசிஷ்டருக்கு நமோ நமோ (பகவன் ..)

காஷாய தண்ட கமண்டலம் தரித்த
சுந்தரமூர்த்திக்கு நமோ நமோ (பகவன் ..)

காமகோடி பீடத்தின் காருண்ய மூர்த்தியாம்
ஜகத்குருவிற்கு நமோ நமோ (பகவன் ..)

தாரக நாமமே கதியென்று சொன்ன
ஆராதன ஸுலபருக்கு நமோ நமோ (பகவன் ..)

காசி நகரில் கங்கை கரையில்
துறவறம் பூண்டவர்க்கு நமோ நமோ (பகவன் ..)

சிவ நாம பிரியராம் ஸ்ரீதரர்
சேவித்த குருவிற்கு நமோ நமோ (பகவன் ..)

சம்பிரதாயம் ஸ்தாபிக்க வேங்கடராமரை
ப்ரேரணை செய்தவர்க்கு நமோ நமோ (பகவன் ..)

ஊமை குழந்தைக்கும் ஞானத்தை அருளிய
உன்னத குருவிற்கு நமோ நமோ (பகவன் ..)

பதிதனுக்கும் கதி ஒன்றுண்டென
விதி செய்த குருவிற்கு நமோ நமோ (பகவன் ..)

ஊரூராய் சென்று பாகவதம் சொன்ன
கருணாமூர்த்திக்கு நமோ நமோ (பகவன் ..)

காவேரி கரையில் கோவிந்தபுரத்தில்
வீற்றிருக்கும் குருவிற்கு நமோ நமோ (பகவன் ..)

ஒரு குருவிடமிருந்து உபதேசம் பெற வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படி சொல்லும்பொழுதும், ஒரு அனுபூதிமானிடமிருந்துதான் த்யானத்திற்கோ, ஜபத்திற்கோ உபதேசம் பெற வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அப்படி கூறுவதற்கு காரணம் என்ன? அனுபூதிமானாக இல்லாத ஒரு குருவிடம் உபதேசம் பெற்றால் என்ன? உலகத்தில் பல பேருக்கு 'இறைவனின் நாமங்களை சொல்ல வேண்டும்' என்று தெரியும். இருந்தும், அவர்கள் அதை ஒரு மோக்ஷ சாதனம் என்று எண்ணி, முனைந்து கூறுவது இல்லை. அதில் சிரத்தையோ முனைப்போ அவர்களுக்கு ஏற்படுவது இல்லை. ஏன்? ஒரு அனுபூதி பெற்ற குருவிடமிருந்து உபதேசம் பெறாததே அதற்கு காரணம். இப்படிப்பட்டவர்களுக்கு வழி அல்லது மார்க்கம் தெரிந்தாலும், அதில் சிரத்தை வராது. "நான் நாமம் சொல்ல வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே வாழ்நாளை கழிப்பார்களே தவிர, நாமம் சொல்ல மாட்டார்கள்! நாம உபதேசம் பெற்று, அதில் சிரத்தையும் ஏற்பட, அதை முனைப்போடு சொல்லி ஸித்தி பெற வேண்டும் என்றால், ஒரு அனுபூதி பெற்ற குருவிடமிருந்து உபதேசம் பெற வேண்டும்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

முன் அட்டை: கருடாழ்வார் அவதார தினம் - ஜூலை 24; கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி கோவில் சம்ப்ரோக்ஷணம் - ஜூலை 13, 2015
பின் அட்டை - கோவிந்தபுரத்தில்



# மதுரமான மஹனீயர் - 233

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுத்திரவின்படி, ஜூலை முதல் தேதியிலிருந்து மூன்று வாரங்களுக்கு, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு, நாமத்வார் பணிகளுக்காகவும் சத்சங்கங்களில் கலந்து கொள்வதற்காகவும் செல்லும் பாக்கியம் அடியேனுக்கு கிடைத்தது. இந்த சத்சங்க பயணத்தில் குருநாதரருளால் ஏற்பட்ட, மிகவும் குறிப்பிடும்படியான, நினைக்க இனிமையான சில நினைவுகளை இங்கு பார்ப்போம்.

மலேசியாவில் பெனாங், சுபோங்க் ஜெயா, செலங்கூர், கேமரூன் ஹைலேண்ட்ஸ் மற்றும் கோலாலம்பூர் பகுதிகளிலும் சிங்கப்பூரில் ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் PGP ஹாலிலும், மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாமத்வார்களிலும், தினம்தோறும் குருநாதர் திருவருட் பெருமையாகிய மதுரஸ்மரணம், நாம கீர்த்தனத்தின் மஹிமை, பக்தர்களின் சரித்திரங்கள், மஹாமந்திர கூட்டு பிரார்த்தனைகள், பல பள்ளிகளில் இந்து மாணவ மாணவிகளிடையே மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனைகள் ஆகிய சத்சங்கங்கள் எல்லாம் குருநாதர் அருளால் நன்கு நடைபெற்றன. இம்முறையும், பல புதிய இடங்களில் சத்சங்கங்கள் ஏற்பாடாகி இருந்தன. அதேபோல், புதிய அன்பர்கள் பலரை சந்திக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது.

பல வருடங்கள் முன்பு, ஒரு மாலைப்பொழுதில், நாமத்வார் அன்பர்களிடம் ஸ்ரீஸ்வாமிஜி பிரத்யேகமாக தனித்து பேசுகையில், தன்னோடு தொடர்புடையவர்களும், தன்னை வந்து அடைய வேண்டிய அன்பர்களும், உலகில் பல ஊர்களிலும், நாடுகளிலும் இருக்கின்றார்கள். தகுந்த காலம் வரும்பொழுது, பகவான் அவர்களை நம்முடன் கூட்டி வைப்பான். நாம் செய்ய வேண்டியது எல்லாம், ஆங்காங்கு சென்று, குருவின் ஆணையை சிரமேற்கொண்டு, மஹாமந்திர

கீர்த்தனம் செய்தால் போதும். மற்றதெல்லாம், குருநாதர் பார்த்து கொள்வார்கள். வேறொரு முயற்சியும் செய்ய வேண்டியது இல்லை. குருநாதரை அடைய வேண்டிய பாக்யசாலிகளை பகவான், தானாக அந்த இடத்தில் கொண்டு வந்து சேர்த்து விடுவான் என்றார்கள். புது அன்பர்கள் ஒவ்வொருமுறையும், சத்சங்கத்தில் குருநாதரிடம் வந்து சேர்கையில், முன்பு அந்த மாலைப்பொழுதில், குருநாதர் சொன்ன அந்த சொற்கள், ஞாபகத்திற்கு வரும். அதை, இந்த சத்சங்க பயணத்தில் பார்க்க முடிந்தது.

சுந்தைபுலோ என்றொரு இடம் மலேசியாவில் உள்ளது. அங்கு ஒரு வீட்டில் சத்சங்கம் என சென்றிருந்தேன். வீட்டில் நல்ல தோட்டம். சுற்றியும் புல்வெளி. துளசியின் பச்சை பசேலென்ற வர்ணம். நல்ல வாசனை. உள்ளே போகையிலேயே, அந்த தோட்ட சூழ்நிலையே மனதை கொள்ளை கொள்ளுவதாக இருந்தது. நிகுஞ்சம் போன்றதொரு அமைப்பு. பூச்செடிகள், கொடிகள் எல்லாம் இருக்க, ஒரு ஊஞ்சலில் ராதாகிருஷ்ணனை மிக அழகாக எழுந்தருள பண்ணி இருந்தார்கள். இந்த காட்சியின் வியப்பிலிருந்து மீளும் முன்னரே, மற்றொரு ஆச்சரியம் காத்து இருந்தது. பகவானின் இனிய வேணு கானம் போல், நம் குருநாதரின் மதுரமான குரல், வீட்டிலிருந்து தெளிவாக கேட்டது.

'ஏது குருநாதர் இங்கு வந்து விட்டார்களோ' என்று படபடப்பே வந்து விட்டது. புது இடத்தில், யார் முன்பு குருநாதர் பேசுகிறார் என பார்த்தால், 'அழைக்கின்றான் அரங்கன்' உபன்யாசம் டிவியில் வந்திருந்ததை அவ்வீட்டார் போட்டு கேட்டு கொண்டிருந்தனர். அவர்களிடம் இருநிமிடம் பேச்சு கொடுத்தவுடனே தெரிந்து விட்டது; டி.வியில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பேசி இருந்த அனைத்து உபன்யாசங்களையும் பதிவு செய்து, அவ்வப்பொழுது கேட்டுக்கொண்டே இருப்பராம். மேலும், அந்த அன்பரின் மனைவி பேசுகையில் எல்லாம், அடிக்கடி ஸ்ரீஸ்வாமிஜியை பற்றி சொல்லி கொண்டே இருந்தார். தனக்கு குருநாதர் பன்முறை கனவில் வருவதாகவும், பேசுவதாகவும், அடிக்கடி வீட்டிற்கே வருவது போல காட்சி வருவதாகவும்

சொல்லிக்கொண்டே இருந்தார். நேரில் பார்ப்பது போல தெளிவாக இருக்கிறது என்று சொல்ல சொல்ல, நமக்கு ஆச்சரியம் உயர்ந்து கொண்டே போனது.

அன்று அந்த வீட்டில் மதுர கீத பஜனையுடனும், மஹாமந்திர கீர்த்தனத்துடனும் மிக இனிமையாக அந்த சத்சங்கம் பூர்த்தியானது.

மலேசியா நாமத்வாரிலேயே 3நாட்களுக்கு, மதுர உற்சவம் கோலாஹலமாக நடைபெற்றது. ப்ரேமிகவரதன் மற்றும் ஸ்ரீஸ்வாமிஜியின் திருவுருவ படங்களை நாமத்வாரின் உள்ளேயே புறப்பாடு செய்து, புஷ்பாஞ்சலி செய்தோம். ஊஞ்சலில் பகவான் அமர்ந்திருக்க, கோபகுடீர குழந்தைகளும் அன்பர்களும் மதுரகீதம் இனிமையாக பாடினர். மூன்றாம் நாள் நாமத்வார் அன்பர்கள் 64 விதமான சுவையான பதார்த்தங்களை, பகவானுக்கு நிவேதனமாக Bhog ஏற்பாடு செய்திருந்தனர்.

மூன்று நாட்களும் நல்ல கூட்டம். இரண்டாம் நாள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளி உள்ள 'காகித மலர்கள் - பாகம் இரண்டு' Datin Paduka Mother Mangalam - Pure Life Society அவர்களால் வெளியிடப்பட்டது. 1950களில் ராமகிருஷ்ணரின் உபதேசங்களால் கவரப்பட்டு, துறவு வாழ்க்கை மேற்கொண்ட Mother Mangalam அவர்களின் குருநாதர், சேவை மனப்பான்மையுடன், Pure Life Societyஐ துவக்கினார். ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிக்கரம் நீட்டி வாழ்வளித்து தூய்மையான சேவை அளித்து வரும் இந்த ஸ்தாபனத்தை இப்பொழுது நடத்தி வரும் Mother Mangalam, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மீது மிகுந்த மரியாதையும் மதிப்பும் அன்பும் கொண்டவர். அவர் பேசுகையில் 'நமது பழமையான சனாதன விஷயங்களை தெரிந்து கொள்ள இக்காலகட்டத்தினருக்கு அவகாசமோ, சூழலோ இல்லை. அவர்களின் அறிவில் ஆழமோ இல்லவே இல்லை. அப்படியே சிலர் தெரிந்து கொண்டாலும், அதை தற்கால வாழ்க்கைக்கு ஏற்றாற்போல் இணைத்து கடைப்பிடித்து கொள்ள தடுமாறுவது ஒரு சவாலாகவே இருக்கிறது.

இன்றைய தலைமுறையினர் எல்லோரும் ஏன், எதற்கு என கேள்வி கேட்டு, அதற்கு அறிவியல் ரீதியான விளக்கமும் எதிர்பார்க்கின்றனர். அப்படி கிடைத்தால்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் செய்கின்றனர். இதை எல்லாம் தெரிந்து, உலகம் போகும் போக்கையும் அறிந்து, அதற்கு தகுந்தாற்போல் தர்மத்தை பக்குவமாக எளிதாக்கி, அறிவியல் ரீதியான விளக்கம் அளித்து, ஸ்ரீஸ்வாமிஜி இப்படி அருளி உள்ளார்கள். இந்நூல் குழந்தைகளுக்கு மட்டுமல்ல; அனைவரும் படித்து பயனுற வேண்டிய ஒன்று' என்றார். நன்கு தெளிவாக அழகாக இருந்தது அவர் பேச்சு.

"உலகம் யாவும் பகவானிடத்தில் ஒடுங்கும். அவனை குளிர்வித்தால் உலகே குளிரும். அவனை குளிர்விக்க நாமகீர்த்தனம் போதும்" என குருநாதர் சொல்வார்கள். மதுர உத்ஸவத்தில் ப்ரேமிகவரதனிடம் பிரார்த்தனை செய்து மஹாமந்திர கீர்த்தனமும் செய்த நாளன்று, ஒரு மாத காலம் கோடையில் வெயில் சுட்டெரித்து கொண்டிருந்த மலேசியாவில் ஜில்லென மழை பெய்தது!!

மதுரஸ்மரணம் இல்லாமல் மதுர உற்சவமா? குருநாதரை பற்றி அவர் சரித்திரத்தை பற்றி பேசுவதும் கேட்பதும் பெரும் பாக்கியமன்றோ? மலேசிய நாமத்வாரில் மட்டுமல்ல சிங்கப்பூர் நாமத்வாரிலும் மதுரஸ்மரணம் **MY GURU as I SEE HIM** இடம் பெற்றிருந்தது. பலர் மிகவும் ஆழ்ந்து அனுபவித்து கேட்டனர்.

மதுரஸ்மரணத்தை கேட்ட அன்பர்கள் பலர், அவரவர்களுக்கு குருநாதர் தம்மிடம் இனிமையாக பேசியது, அவரது உபதேசங்கள், அவரது வாத்ஸல்யம், அவர் கருணை, தம்தம் குடும்பங்களில் அவர் பங்கு கொண்டு லீலை செய்தது எல்லாம் நினைவிற்கு வந்து தங்களை மிகவும் நெகிழ்ச்சி அடைய செய்தது என்று சொல்லிக்கொண்டே இருந்தனர். திடீரென, குருநாதரே சிங்கப்பூருக்கு வந்து கூடவே இருக்கிறாரோ என தோன்றியது. அந்த அளவிற்கு எல்லோரும் மிகவும் ஆர்வமுடன் அனுபவித்தனர்.

இது எல்லாம் மிக மிக நிஜம் என்பது போல,

சிங்கப்பூர் நாமத்வார் தலைவர் ஸ்ரீபாலசுப்ரமணியன் பூர்த்தி தினத்தன்று, “இன்றைய சத்சங்கத்தின்பொழுது சிறிது நேரம் சந்தன வாசனையும் துளசியின் சுகந்தமும் மிகவும் மலர்ந்து வீசியதை தெளிவாய் உணர்ந்தேன்” என்றார். அது போலவே மேலும் பலரும் உணர்ந்திருக்கின்றனர் என்பதையும், பின்னர் தெரிந்து கொள்ள முடிந்தது.

சிங்கப்பூர் ஸ்ரீனிவாச பெருமாள் PGP ஹாலில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உலக பிரசித்தி ஆகி விட்ட ‘கலியையும் பலி கொள்ளும்’ என்ற கீர்த்தனத்தை மையக்கருத்தாக வைத்துக்கொண்டே, இரண்டு நாள் தொடர் உபன்யாசம் இருந்தது. பெருந்திரளாக அன்பர்கள் கலந்து கொண்டு அனைவரும் சேர்ந்து, மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தது மிக அருமையாக இருந்தது. இந்த மூன்று வார சத்சங்க ஏற்பாடுகளை மிகுந்த குருபக்தியுடன், மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாமத்வார் அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

2011இல் மலேசியா நாமத்வாரின் திறப்பு விழாவின்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதிவு செய்யப்பட்ட ஒரு அருளுரை ஒளிபரப்பப்பட்டது. அதில் ஸ்ரீஸ்வாமிஜி பேசுகையில், “நாமத்வாரில் ப்ரேமிகவரதனும் மாதுரீஸகியும் மிகுந்த சான்னித்யத்துடன் இருக்கின்றனர். அவர்கள் நாமத்வாருக்கு வரும் ஒவ்வொரு அன்பருடனும் விளையாட காத்து கொண்டிருக்கின்றனர். எப்படி விளையாடுவது? ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு மிக பிடித்தமான விளையாட்டு மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்வதே. நாமத்வாருக்கு வந்து மஹாமந்திர கீர்த்தனம் செய்யச்செய்ய உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் அவன் விளையாட உள்ளான்” என்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளி இருந்தார்கள். அது போலவே, சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாமத்வார்களில், சனிக்கிழமைதோறும் நடைபெறும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையில் கலந்து கொண்டு, ஆச்சரியமான பலன்களை அடைந்த அன்பர்கள் பலர், தனிப்பட்ட முறையில் வந்து, குருக்ருபையால் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

**கேள்வி:** ஒரு காரியத்தை நாம் உண்மையான அன்பினால்தான் செய்கிறோம் என எப்படி தெரிந்து கொள்வது?

**பதில்:** நாம் பல காரியங்களை செய்கிறோம். சில செயல்கள் மிக அவசியமானவை. உடலை காப்பாற்றி கொள்ள, சாப்பிடுவது போன்ற அத்யாவசியமான காரியங்களை செய்கிறோம். உடற்பயிற்சி போன்றவை, உடலுக்கு நல்லது என செய்கிறோம். சில காரியங்கள் மனதிற்கு பிடித்திருக்கிறது என்று செய்கிறோம். பாட்டு ஒன்று கேட்கிறோம் என்றால், அந்த அழகான பாட்டு கேட்க பிடித்திருக்கிறது. சில காரியங்களை நிர்ப்பந்தத்தினால் செய்கிறோம். உதாரணத்திற்கு குடும்பம் என்றால், அதில் நாமும் ஒரு அங்கம் என்பதால் அப்படி கடமைகளை செய்கிறோம். அது ஒரு நிர்ப்பந்தம். சில காரியங்களை, சமூக நிர்ப்பந்தத்தால் செய்கிறோம். வேலை செய்வது போன்ற இடங்களில், தொழில் நிர்ப்பந்தத்தினால் சிலவற்றை செய்கிறோம். சில காரியங்களை அரசு போடும் சட்டத்திற்கு கட்டுப்பட்டு செய்கிறோம்.

சில காரியங்களை ஏற்கனவே பெற்ற உதவிக்காக நன்றிக்கடனோடு செய்கிறோம். சில காரியங்களை ஒருவரிடம் இருந்து பிரதிபலனை எதிர்பார்த்து செய்கிறோம்.

ஆனால் இப்படி எந்த ஒரு நிர்ப்பந்தமும், எந்த ஒரு காரணமும் சொல்ல முடியாமல் ஒரு காரியம் செய்வோமானால், அதுவே பிரேமையினால் செய்ய கூடிய சேவையாக ஆகும்.

**காலை 7.20 - 7.30AM ஒவ்வொரு சனிக்கிழமையும்** *பொதிகை* **தொலைக்காட்சியில்** "*மதுரகீதம்*" - **ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 9

–ஸ்ரீ ஸ்வாமிஜி (27)

(சுகர் பரிக்ஷீத் மஹாராஜாவின் கேள்விகளுக்கு பதிலளிப்பது .... தொடர்ச்சி)

ராஜன்! இவ்வாறு சிருஷ்டி விஷயமாக அவர் மிகவும் ஆலோசித்தபோது அவர் காதுகளில் மெய் எழுத்துக்களில் பதினாறாவது மற்றும் இருபத்தோராவதான எழுத்துக்கள் இரண்டு தடவை ஒலித்தன. (க முதல் ம வரையுள்ள ஸம்ஸ்க்ருத எழுத்துக்களில் 16வது த, 21வது ப) 'தப' என்று இரண்டு முறை கூறியதால் "தவம் புரிவாய்" என்று விதிப்பதாக பிரம்ம தேவர் புரிந்துகொண்டார். பகவானை நம்பியிருக்கும் சாதுக்களுக்கு உள்ள ஒரே சொத்து தவம்தானே! அதனால், அதை "நிஷ்கிஞ்சனானாம் யத்தனம்" என்று கூறுகிறார். அதனால்தான் அவர்களை தபோதனர்கள் (தவத்தையே தனமாக உடையவர்கள்) என்றும் கூறுவர்.

இப்படி 'தவம் புரிவாய்' எனும் சப்தம் எங்கிருந்து வருகின்றது என்று தேடலானார். நான்கு திக்குகளிலும் பார்த்துவிட்டு ஒன்றும் காணாதவராய், தனது தாமரை ஆஸனத்திற்கே மீண்டும் வந்து அமர்ந்தார். தவம் புரிவதே தனக்கு ஹிதம் என்பதை உணர்ந்ததுபோல் தவத்தில் மனதை செலுத்தினார். ஆயிரம் தேவ வருடங்கள் மனதையும் பிராணனையும் வென்று, கர்மேந்த்ரியங்கள் ஞானேந்த்ரியங்களையும் ஜெயித்து ஏகாக்ர சித்தத்துடன் தவம் புரிந்தார். தவம் புரிபவர்களுள் சிரேஷ்டராக விளங்கினார் பிரம்மா.

சந்தோஷமடைந்த பகவான், இப்படி கடும் தவம் புரிந்த பிரம்ம தேவருக்கு தனது லோகமான வைகுண்டத்தைக் காண்பித்தார். எந்த லோகத்தைக் காட்டிலும் உயர்ந்தது வேறில்லையோ, சோகம், மோஹம் மற்றும் மரணம் இல்லாததும், ஞானிகளால் துதிக்கப்பட்டதுமான அந்த மிக சிரேஷ்டமான

வைகுண்டத்தை காட்டியருளினார். ரஜோ குணம், தமோ குணம், இவைகளுடன் கூடிய ஸத்வகுணம், காலம், மாயை இவை எதுவுமே அந்த வைகுண்டத்தில் இல்லை. அங்கு ராக த்வேஷாதிகள் இல்லையென்று சொல்ல வேண்டுமா?

அங்கு உள்ள ஸ்ரீஹரியின் பார்ஷதர்கள் தேவர்களாலும் அஸுரர்களாலும் பூஜிக்கப்படுகின்றனர். அங்கு எல்லோருமே நீலமான திருமேனியுடையவர்கள், தாமரையை ஒத்த கண்களையுடையவர்கள், மஞ்சள் பட்டாடை உடுத்தியவர்கள், நல்ல காந்தியும் அழகுமுடையவர்கள், திவ்யாபரணங்கள் தரித்தவர்கள், குண்டலங்கள், கிரீடங்கள், மாலைகள் தரித்தவர்கள். ஆகாயம், மின்னலுடன் கூடிய மேகக் கூட்டங்கள் உடன் பிரகாஸிப்பது போல், இந்த வைகுண்டம், அங்குள்ள திவ்யசூரிகளின் பிரகாசமான விமானகூட்டங்களாலும், ஸ்த்ரீகள் காந்தியாலும் பிரகாசிக்கின்றது.

ஸ்ரீர்யத்ர ரூபிண்யுருகாய பாதயோ: கரோதி மானம்
பஹுதா விபூதிபி:
பரேங்கம் ஸ்ரிதா யா குஸுமாகரா நுகைர் விகீயமா நா
ப்ரியகர்ம காயதீ 2.9.13

இங்கு ஸாக்ஷாத் ஸ்ரீலக்ஷ்மியானவள் மிகவும் அழகான வடிவுடன் ஊஞ்சலில் விளையாடியபடியே தனது ப்ரியனான பகவானுடைய லீலைகளை பாடுகிறாள். வண்டுகள் பலவாறு லக்ஷ்மிதேவியை கானம் செய்கின்றன. தாயார் பலவிதமாக பகவானுடைய திருவடிகளை பூஜை செய்கிறாள். அந்த வைகுண்டத்தில் பிரம்மதேவர், ஸுனந்தன், நந்தன் போன்ற தனது பார்ஷதர்களால் சேவிக்கப்பட்டவரும், பக்தர்கள் அனைவருக்கும் பதியும், லக்ஷ்மிகாந்தனும், யக்ஞங்களை காப்பவருமான அந்த லோகநாதனைக் கண்டார்.

தனது பிருத்யர்களை அனுக்ரஹிப்பவரும், காண்பவர்களை சந்தோஷம் அடையச் செய்கின்றவரும், புன்னகையுடன் மலர்ந்த கண்களையுடையவரும், கிரீடம் தரித்தவரும், குண்டலங்களணிந்தவரும், நான்கு திவ்ய கைகள் உடையவரும், வக்ஷஸ்தலத்தில் ஸ்ரீவத்ஸம் எனும் மரு உடையவருமான அந்த பரமாத்மாவை மிகச் சிறந்த ஆஸனத்தில் அமர்ந்திருப்பவராய் சக்திகளால் சூழப்பட்டவராய் கண்டார் பிரம்மதேவர்.

பகம் எனும் ஐஸ்வர்யங்களுடன் கூடினவரும், தனது ஸ்வரூபத்திலேயே ரமிக்கின்றவருமான ஈச்வரனை பிரம்மதேவன் கண்டார்.

எந்த சரணங்கள் ஞானத்தின் எல்லையில் அடையப்படுகிறதோ, அந்த சரணத்தை பிரம்மா தரிசனத்தினால் உண்டான சந்தோஷம் நிறைந்த மனதையுடயவராய், மயிர்கூச்சல் உடைய சரீரத்தோடும், ஆனந்தக் கண்ணீரோடும் வணங்கினார்.

தம ப்ரீயமாணம் ஸமுபஸ்திதம் ததா ப்ரஜா

விஸர்கே நிஜசாஸநார்ஹணம்

பபாஷ ஈஷத் ஸ்மித சோசிஷா கிரா பரிய:

ப்ரியம் ப்ரீத மநா: கரே ஸ்ப்ருசன் 2:9:18

அப்பொழுது பகவான், அவரது கையைப் பற்றி புன்முறுவலோடு அவரிடம் பேசத் தொடங்கினார்.

(கனியும்)



# கோவிந்தபுரத்தில்
# புருஷோத்தம மாத சத்சங்கம்

புருஷோத்தம மாதத்தை ஒட்டி கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் ஒரு மாதம் சத்சங்கம் நடந்தது. குருநாதர் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் ஸ்ரீ சைதன்ய சரித்ரம் பிரவசனம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் பகவத்குண பிரவசனம் என்றவுடன் பல ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வந்து கூடி விட்டார்கள். கோவிந்தபுரமே விழாக்காலம் பூண்டிருந்தது.

முதல் நாள் மங்கள வாத்யம், யானை, அதிர்வேட்டு, பூரண கும்பம், பகவன் நாம கீர்த்தனையுடன் ஸ்ரீஸ்ரீ அண்ணாவிற்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. தினமும் காலையில் **4.50** மணி அளவில் பக்தர்களுடன் குருஜி மஹாமந்திர கீர்த்தனம் செய்துகொண்டே ஸ்ரீஸ்ரீ அண்ணாவின் தியான குடீரம் வாசலுக்கு செல்வார். குருஜி வாசலுக்கு செல்வதற்கும் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா கதவை திறந்து கொண்டு வருவதற்கும் சரியாக இருக்கும். குருஜிக்கு ஸ்ரீ ஸ்ரீ அண்ணா பரமபத வாசலை திறந்து கொண்டு வருவதாகவே தோன்றும். ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவிற்கு ஒரு புஷ்ப மாலை அணிவிப்பார். ராமானுஜம்ஜி ஹம்ஸம் போட்ட ஸ்வேத சத்ரத்தை, ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவிற்கு பிடித்துக் கொண்டு வர, பாகவத பரமஹம்ஸரான ஸ்ரீஸ்ரீ அண்ணா கஜகதியில் நடந்து வருவார். பக்தர்கள் வாத்யங்களுடன் மஹாமந்திர கீர்த்தனம் செய்து கொண்டே வருவார்கள். வீதி பஜனை சைதன்ய குடீரத்தில் ஜகந்நாதர் சன்னதியில் வந்து பூர்த்தி அடையும்.

சரியாக **7.50**AM ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் பகவன் நாம போதேந்திராள் அதிஷ்டான தரிசனத்திற்கு வருவார். பிறகு காலை **8**மணியில் இருந்து **10**மணி வரை தகுந்த அதிகாரிகளுக்கு ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் கிரந்தமான ஆசார்ய ஹிருதயம் பாடம் சொல்வார். மாலை சரியாக **4**PM குடீரம்

வந்து சைதன்ய சரித்திரம் பிரவசனம் நடைபெறும். பிரவசனம் 6PM அல்லது 6.30PM வரை நடக்கும். ஐநூறுக்கும் மேற்பட்ட பக்தர்கள் உருக்கமான சரித்திரத்தை கண்ணீர் சிந்தியபடியே கேட்பார்கள். பிரவசனத்தின் நடுநடுவே, ஸ்ரீ ஸ்ரீ அண்ணா மஹாமந்திர கீர்த்தனம் சொல்வதும், அதை பக்தர்கள் வாங்கி சொல்வதும் பரவசமாக இருக்கும். மாலையில் அதிஷ்டானத்தில் குருஜி பாகவதர்களுடன் கீர்த்தனம் செய்வார்.

இதன் நடுவே பௌர்ணமி அன்று மன்னார்குடி ராஜகோபாலனுக்கு தெப்போத்ஸவம் வந்தது. ஸ்ரீஸ்ரீ அண்ணா பக்தர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று, தெப்பத்தில் ராஜகோபாலனை தரிசனம் செய்து, ஹரித்ரா நதியை சுற்றி பக்தர்களுடன் ஆடிப்பாடிக்கொண்டு கீர்த்தனம் செய்தது, அந்த பௌர்ணமி நிலவில் கண்கொள்ளா காட்சியாக அமைந்தது.

இதில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் தங்கள் பாக்யத்தை நினைத்து கிருதாத்தர்களானார்கள். இப்படியாக ஒரு மாதம் சத்சங்கம் பூர்த்தி அடைந்தது.

18ஆம் தேதி பூரியில் ஜகந்நாதருக்கு ரத யாத்திரை; அது போலவே கோவிந்தபுரத்திலும் ஜகந்நாதருக்கு ரதயாத்திரை நடந்தது. பல ஊர்களில் இருந்தும் வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் மஹாமந்திர கீர்த்தனம் செய்ததும், அதன் நடுவே, ஸ்ரீ ஸ்ரீ அண்ணா நர்த்தனம் ஆடிக்கொண்டே வந்ததும் வார்த்தையில் வர்ணிக்க முடியாதது. பல பக்தர்களுக்கு அன்று ஸ்ரீஸ்ரீ அண்ணா மஹாபிரபுவாகவே தரிசனம் தந்தார்.

அப்படி தரிசனம் செய்தவர்கள் பாக்யவான்கள். இந்த ஒரு உத்ஸவத்தில் கலந்து கொண்ட பக்தர்களால், இதை ஜன்மாவில் மறக்க முடியாது. சுந்தர், ஸ்ரீனிவாசன் இருவரும் ஓடி ஓடி, கைங்கர்யம் செய்து, பாகவதர்களின் ததி ஆராதனையை கவனித்துக்கொண்டார்கள். இதன் முழு நிர்வாகத்தை விஷ்ணுராத பாகவதர் பொறுப்பேற்றுக்கொண்டு நடத்தினார்.

# ஒலியும் ஒளியும்

ஒரு விடியற்காலை நேரம். இயற்கை எழில் கொஞ்சும் விதமாக, மரங்கள் அடர்ந்து பச்சை பசேலென இருந்தது. இரவில், செடிகளின் இலை மேல் வீசி இருந்த பனியோடு மெலிதாக அடித்த காற்று குளுமையாக இருந்தது. பறவைகள் இனிமையாக காலைப்பொழுதை தொடங்கின என்பது, அவைகளின் 'கிச் கிச்' என்ற ஒலியிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.

குருநாதர் ஜபம் செய்வதற்காக தர்ப்பாசனத்தின் மேல் அமர்ந்திருந்தார். வெள்ளை வெளேரென்ற வஸ்திரம் அணிந்திருந்தார். அழகிய தன் தாமரைக்கண்களை மூடியவாறு ஜபத்தில் ஆழ்ந்திருந்தார்.

அப்பொழுது, அருகாமையில் இருந்த ஒரு வீட்டில், ஒலிபெருக்கி மூலம் ஏதோ சப்தம் கேட்டது. அப்பொழுது குருநாதர் ஒரு கணம், தான் செய்யும் ஜபத்தை நிறுத்தி விட்டு கண்களை திறந்தார். ஒலி வரும் திசை நோக்கி உன்னிப்பாக கவனித்தார். அருகிலிருந்தவரை அழைத்து "அது என்ன சப்தம்" என்று கேட்டார். அவரும் உடனே அதை உன்னிப்பாக கவனித்தார். ஆனால், அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் மௌனமாக இருந்தார். உடனே குருநாதரே புன்முறுவலித்து கொண்டு, "அருகில் ஏதோ ஒரு வீட்டில் பெருமாளை திருப்பள்ளி எழுச்சி செய்கிறார்கள் போலும்" என்றார். உடனே, அப்பொழுது கேட்ட ஒலியானது, சுப்ரபாதம்தான் என்று அருகிலிருந்தவருக்கு விளங்கியது. மேலும் சிறிது நேரம் அமைதியாக இருந்த குருநாதர், தொடர்ந்து பேச ஆரம்பித்தார். "காஞ்சி மஹாஸ்வாமிகள் இது குறித்து என்ன சொல்லி இருக்கிறார்கள் தெரியுமா?" என்று கேட்டார் குருநாதர். "குருநாதர் சொன்னால் தெரிந்து கொள்கிறோம்" என்று பணிவன்புடன் சொன்னவுடன் குருநாதரே பேசினார்.

"அவர் என்ன சொல்லி இருக்கிறார் என்பதை சொல்கிறேன். **(Tape Recorder)** டேப்ரெகார்டர் மூலம்

சுப்ரபாதம், ஸ்லோகம் முதலியனவற்றை பாடுவது எப்படி இருக்கிறது தெரியுமா? அழகான திருமண வீடு; அதில் பெரிதாக பந்தல் எல்லாம் போட்டு இருக்கின்றார்கள். அதை பார்த்தாலே செல்வந்தர் ஒருவரின் வீட்டு திருமணம் என்று நன்றாக தெரிகிறது. எல்லாம் அழகாக, ஆடம்பரமாக இருக்கின்றன. அப்பொழுது பலர் அந்த வீட்டு திருமணத்தில் கலந்து கொள்ள வருகின்றார்கள். வருவோரை எல்லாம் வரவேற்க ஒரு **Reception Table** அமைத்து அதில் சந்தனம், குங்குமம், பன்னீர், புஷ்பங்கள் எல்லாம் வைத்து வரவேற்பது போலில்லாமல், ஆள் ஒருவரையும் வைத்து வரவேற்காமல், அதற்கு பதிலாக **Tape Recorder** அல்லது **CD Player** மூலம் "எல்லோரும் வாருங்கள்; மனமாற உங்களை அழைக்கின்றோம். வந்து இன்று திருமணம் செய்து கொள்ளும் இந்த புதுமண தம்பதிகளை ஆசீர்வதித்து செல்லுங்கள்" என்று வரவேற்பு செய்தால் வருபவர்களின் உணர்வுகள் **feelings** எப்படி இருக்கும்? ஒரு வீட்டில் கல்யாணப்பந்தல் போட்டு இருக்கிறார்கள் என்றால், ஒவ்வொருவரையும் தனியாக பார்த்துப் பார்த்து அல்லவா வாருங்கள் வாருங்கள் என்றழைப்பார்கள்! அதுபோல்தான், ஒரு ஒலிபெருக்கி மூலமாகவோ அல்லது ஒரு மெஷின் சாதனம் மூலமாகவோ மட்டுமே, பெருமாளுக்கு ப்ரபோதனம் அல்லது டோலோத்ஸவம் செய்தால், பெருமாளுக்கும் அப்படிப்பட்ட உணர்வுகள் **feelings**தான் ஏற்படும் என்று சொல்லி உள்ளார்கள்" என்று சொல்லி விட்டு, மறுபடி தன் தாமரை கண்களை மூடியவாறு ஜபத்தில் ஆழ்ந்து விட்டார்.

குருநாதர் கண்களை மூடி கொண்டார். ஆனால், எங்கள் ஹிருதயத்தில் ஒரு புதிய ஒளி உண்டாயிற்று. மேலும், ஓரிடத்தில் நாம் நாமம் சொல்லாமல், நாமம் சொல்லும் ஒரு மெஷினை மட்டும் போட்டுக்கேட்டு கொண்டிருந்தால், அதுவும் இதுபோல்தானே இருக்கும் என தோன்றியது. காற்றில் வந்த ஒலி மூலம் கூட, ஒளி தந்த சத்குருவின் வார்த்தைகளை, கொஞ்சம் கொஞ்சமாக அசை போட்டு கொண்டிருந்தோம்.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Guruam Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் – 18

## தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஶ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

### ஶ்ரீஞானேஸ்வரர்-7

யாரும் எதை தொடுவதற்கு கூசுவார்களோ அஞ்சுவார்களோ, அப்படிப்பட்ட சுடுகாட்டில் கிடக்கும் கபாலம் பரமேஸ்வரனுக்கு நகையாக இருக்கிறது. கபால மாலை அணிந்து அவர் மயானத்தில் இருக்கிறார். மயானத்தில் பரமசிவன் இருக்கிறார் என்றவுடன், நம்மூர் மயானத்தில் அவர் இருக்கிறார் என்று நினைக்கக் கூடாது. உலகமே எரிந்து விட்டது என்றாலும், எஞ்சி இருக்கக் கூடிய ஒன்று இருக்குமானால், அதுவே பரமேஸ்வரன். உலகமே அழிந்தாலும், பரமேஸ்வரனுக்கு அழிவில்லை என்கிற தத்துவத்தைத்தான், பரமேஸ்வரன் மயானத்தில் வாசம் செய்கிறார் என்று சொல்கின்றனர். இப்படிப்பட்ட பரம வைராக்யசீலராக தோற்றமளிக்கும், தியாகராஜாவான பரமேஸ்வரனின் அம்சமாக தோன்றியவர்தான் நிவ்ருத்தி தேவர். விரக்தியையும் வைராக்யத்தையும் அருளுபவர் பரமசிவன்.

1267ல் நிவ்ருத்தி தேவரும், 1269ல் ஞானேஸ்வரரும், 1271ல் சோபான தேவரும், 1273ல் முக்தாபாயும் பிறந்தனர். முதலில் குழந்தைகளே இல்லாமல் இருந்தவருக்கு, ஆச்சரியமான நான்கு அவதார புருஷர்கள், குருவருளால் பிறந்தனர். சாக்ஷாத் வைகுண்டபதி நாராயணன்தான் ஞானேஸ்வரராக அவதரித்தார்.

ப்ரும்மாவிற்கு நான்கு முகங்கள். நான்கு வேதங்கள்தான் நான்கு முகங்கள். அவர் கையில் ஜபமாலையும், கமண்டலமும் இருக்கிறது. எப்பொழுதும் அவர், வேதத்தையே சொல்லிக் கொண்டு இருக்கிறார். அவர் அருகில் இருக்கும் கலைவாணியின் கையில் புஸ்தகமும், வீணையும் இருக்கிறது. அதனால்தான் அவளுக்கு வீணாபாணி, புஸ்தகபாணி என்று பெயர். ப்ரும்மா எப்பொழுதும் வேதம் சொல்வதுபோல், புருஷர்கள் எப்பொழுதும் வேதம் சொல்கிறார்கள். புராணம், இதிஹாஸம், பாகவதம் போன்றவையே சரஸ்வதி கையில்

இருக்கும் புஸ்தகம். அது பெண்களுக்கு உரியது. வீணை கையில் இருப்பது கலைகளை குறிக்கிறது. கலைகளும் பெண்களுக்கு உரியது. வேதம் என்பது புருஷர்களுக்கு என்றும், கலைகளும் புராணங்களும் இதிஹாசங்களும் பெண்களுக்கு எனவும் வைத்துள்ளனர். அதையே ப்ரும்மாவும் சரஸ்வதியும் காட்டுகின்றனர்.

சோபானம் என்றால் படிக்கட்டு என்று அர்த்தம். மோக்ஷத்திற்கு எப்படி போக வேண்டும் எனும் வழியை படிக்கட்டு போல் அமைத்து, உலகுக்கு உபதேசம் செய்ய வந்திருப்பவர் என்பதால், ஞானேஸ்வரருக்கு அடுத்தவராக வந்தவருக்கு சோபான தேவர் என்று பெயர். அவர் ப்ரும்மதேவரின் அம்சம்.

முக்தாபாய் துர்க்காதேவியின் அம்சமாக பிறந்தவள். முக்திக்கான வழியை திறந்து விடக்கூடியவள் என்பதால், அவளுக்கு முக்தாபாய் என்று பெயர். இந்த நான்கு மஹான்களை பற்றியும் பாடாத மஹாராஷ்டிரத்தை சேர்ந்த மஹான்களே இல்லை என்று சொல்லி விடலாம். நாமதேவர், ஏகநாதர் என்று எல்லா பெரிய மஹான்களும் கொண்டாடி இருக்கின்றனர்.

விட்டோபந்த் சன்யாசத்தை மேற்கொண்டபின், மறுபடி கிருஹஸ்த தர்மத்தில் இருந்தபொழுது பிறந்தவர்கள் இந்த மஹான்கள். இதனால் விட்டோபந்த்திற்கு சிக்கல் பிறந்தது. பழங்காலத்தில் சமூக கட்டுப்பாடு அதிகம். ஒருவன் கடவுளுக்கு பயப்பட்டானோ இல்லையோ, இந்த சமூக கட்டுப்பாடுகளுக்கு பயந்து வாழ வேண்டி இருந்தது. யாராவது ஒருவன் சரியாக நடக்கவில்லை என்றால், பஞ்சாயத்து கூட்டி ஒரு தீர்ப்பு சொல்வார்கள். அதைக் கேட்டு, அதன்படி நடக்க வேண்டும். நடக்கவில்லை என்றால், அவனை வழிக்கு கொண்டு வருவதற்காக கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து, அவனை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து விடுவர். அவனுக்கு யாரும் எந்த பொருட்களையும் தர மாட்டார்கள். யாரும் பெண் தர மாட்டார்கள். எந்த ஒரு வைபவத்திலும், துக்கத்திலும் பங்கேற்பது என்பது அவனால் முடியாததாகி விடும். சுருங்கச் சொன்னால், ஜீவனம் நடத்த முடியாததாகி விடும்.

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

5

– ஜனனி

ஸ்ரீரூபர் மற்றும் ஸனாதனர், தீவிர வைராக்கியம் பொருந்தி த்யாகமயமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். ஸ்ரீஸனாதனர் பற்றி கூறும்பொழுது, அவர் ஒரே மரத்தடியில் கூட, இரண்டு நாட்கள் தங்கமாட்டாராம். வ்ரஜவாஸிகளிடம் இருந்து ரொட்டி துண்டுகளை பெற்று, தண்ணீரோடு விழுங்கிவிடுவாராம். ரொட்டி மீதம் இருந்தால், அதை பூமியில் புதைத்துவிட்டு, மறுநாள் அதையே தண்ணீரில் பிசைந்து சாப்பிடுவாராம். பலகாலம், இதேபோல் அவர் ப்ருந்தாவனத்தில் வாசம் செய்திருக்கிறார். சரீரத்தையே ஒரு புண்ணாக எண்ணி, அதற்கான ஒரு லேபனமாக (ointment) உணவை கருதி, அந்த புண்ணை அலம்பி சுத்தம் செய்வது போல் ஸ்நானத்தை கருதி, அதற்கு ஒரு கட்டு போடுவது போல் வஸ்திரத்தை கருதி, மஹாவைராக்யஸீலர்களாக திகழ்ந்தார்கள் இச்சகோதரர்கள்.

ஸனாதனருக்கு இம்மஹா வைராக்கியத்தின் சிக்ஷையை ப்ரபு காசியில்தான் அளித்தார். அதுவும் வெளிப்படையாக, அவர் ஒன்றுமே கூறவில்லை. ஜாடையில் காண்பித்ததையே, ஸனாதனர் புரிந்து கொண்டார். புத்தியில்லாதவர்களுக்குத்தான் வெளிப்படையான அறிவுரை தேவை. புத்திசாலிகள் ஜாடையிலேயே புரிந்து கொள்வார்கள் அன்றோ!

ஸனாதனர் காசிக்கு வந்ததிலிருந்து, ப்ரபு அவரிடம் பழகும் விதத்தைக் கண்டு, சந்த்ரசேகரர் வியந்தார். ஒரு முஸ்லிம் பகீருக்கு, ப்ரபு இத்தனை க்ருபை செய்கிறாரே என்று அவருக்கு மீண்டும் மீண்டும் தோன்றிற்று.

இதை உணர்ந்த ப்ரபு அவரிடம், “சந்த்ரசேகரா! இவர் யார் தெரியுமா? கௌட தேசத்து பாத்ஷாவின் ப்ரதான மந்த்ரி. மஹா பண்டிதர்; இணையில்லாத பகவத் பக்தர். தன்னுடைய பதவி, பணம், புகழ், சுற்றம் எல்லாவற்றையும் துச்சமாக காலால்

உதறிவிட்டு, பகவானை பஜிப்பதற்காக கிளம்பியுள்ளார். இவருடைய இரு சகோதரர்கள் ஏற்கனவே ப்ருந்தாவனம் சென்றுவிட்டார்கள். இன்று இவர் வருகையால் உனது இல்லமே ஒரு தீர்த்தமாகிவிட்டது என்றால் அது மிகையல்ல" என்று கூறினார். இவ்வாறு ப்ரபு தன்னை புகழ்வதை கேட்ட ஸனாதனருக்கு, ஸீதையை போல், பூமிக்குள் சென்றுவிடலாம் என்று தோன்றிற்று.

இதை கேட்டவுடன், ஸனாதனரை சந்த்ரசேகரர் ஸாஷ்டாங்கமாக ஸேவித்தார். இருவரும் பரஸ்பரம் ஆலிங்கனம் செய்து கொண்டனர். ப்ரபு சந்த்ரசேகரரிடம், "இவரை கங்கைக்கரைக்கு அழைத்துச் செல். அங்கே இவருடைய தாடி-மீசையை எல்லாம் க்ஷவரம் செய்வித்து, சுத்த வைஷ்ணவ ரூபத்துடன் அழைத்து வா" என்று ஆக்ஞாபித்தார். சந்த்ரசேகரரும் அவ்வாறே செய்தார்.


ஸனாதனரிடம் ஒரு சால்வையை தவிர, வேறு ஒரு வஸ்திரம் கூட இல்லை. சந்த்ரசேகரர் எவ்வளவு வற்புறுத்தியும், அவர் ஒரு புது வஸ்திரத்தை ஏற்க மறுத்துவிட்டார். இதைக் கண்டு ப்ரபு மகிழ்ந்தார்.

அச்சமயம் தபன மிஸ்ரர், ப்ரபுவை பிக்ஷைக்கு அழைப்பதற்காக அங்கு வந்தார். ப்ரபு அவரிடம், "இன்று எனது குடும்பம் பெரியதாகிவிட்டது. இருவருக்கு பிக்ஷையிட வேண்டும்" என்றார். தபன மிஸ்ரர் தனது பாக்யம் என்று கூறி, இருவரையும் அழைத்துக்கொண்டு, தன் இல்லத்திற்குச் சென்றார். தபன மிஸ்ரர் வீட்டில், ப்ரபு ஸனாதனரையும் தன்னுடனே அமர்ந்து போஜனம் செய்யுமாறு கூறினார். ஆனால், ப்ரபுவின் உச்சிஷ்ட ப்ரஸாதத்தை ஸனாதனருக்கு அளிக்க வேண்டுமென்று எண்ணிய தபன மிஸ்ரர், "அவருக்கு ஏதோ அனுஷ்டானம் செய்ய வேண்டுமாம். தாங்கள் பிக்ஷையை முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டார்.

பின்பு ஸனாதனர், ப்ரபுவின் உச்சிஷ்டானத்தை ஸ்வீகரித்து, இதற்கு முன் அனுபவிக்காத ஒரு ஆனந்தத்தை அனுபவித்தார்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## வாசனை!

மாதவன் ஒரு அலுவலகத்தில் நல்ல வேலை பார்த்து வந்தான். நன்றாக உடை அணிந்து, அலங்காரம் செய்து கொள்வான். எதுவும் சரியாக இருக்க வேண்டும் என்று கவனமாக இருப்பான்.

ஏனோ அன்று காலை எழுந்ததிலிருந்து, அவனுக்கு வீட்டில் உள்ளோரிடம் எல்லாம், ஏதோ ஒரு மனஸ்தாபம் வந்து கொண்டே இருந்தது. தந்தை, 'மாதவா! நீ படித்த புத்தகத்தை சரியான இடத்தில் மறுபடி வைக்க வேண்டாமா?' என்றார். 'சரி சரி' என்றான் மாதவன். தாய், 'நேற்றே வாங்கி வர சொல்லி சொன்னேன்; மறந்து விட்டாயே' என ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்தினாள். 'ஆமாம் ஆமாம்' என்றான் மாதவன்.

மாலை அவன் அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்த பின், அப்படியே தங்கையும் தம்பியும் வேறு ஏதோ ஒவ்வொன்றை சொல்லி குறைபட்டு கொண்டார்கள். மாதவன் நினைத்தான். 'இது என்ன எல்லோரும் இப்படி குறை சொல்பவர்களாகவே இருக்கிறார்கள். யாருமே சரி இல்லையே' என நினைத்தான்.

அன்று அவன் நண்பன் கணேஷ் பிறந்த நாளாக இருந்தது. வீட்டிற்கு சாப்பிட அழைத்திருந்தான். மாலையில் நன்கு உடை அலங்காரம் செய்து கொண்டு, பக்கத்து வீட்டு சங்கரனுடன், கணேஷ் வீட்டிற்கு சென்றான் மாதவன். புன்சிரிப்புடன் வரவேற்ற கணேஷ் 'கால தாமதமாகி விட்டது. வா நேரே சாப்பிடலாம்' என்றான். மாதவனுக்கு அப்பொழுதுதான் மனம் கொஞ்சம் சமாதானமாகியது. காலையில் இருந்து எல்லோரும் அவனை ஏதோ ஒரு விதத்தில் குறை சொல்லி கொண்டே இருந்தார்கள் அல்லவா! உற்சாகமுடன் சங்கரனின் கைபிடித்து கொண்டே உணவருந்த உட்கார்ந்தான்.

’உனக்கு பிடித்த ஸ்வீட்’ என்றபடி கணேஷ் முதலில் பரிமாறினான். ஆவலுடன், அதை எடுத்து சாப்பிட்ட மாதவன் முகம், கொஞ்சம் மாறியது. இருந்தாலும், அமைதியாக சாப்பிட்டான். கணேஷ் தாய், சகோதரி என அவன் வீட்டில் உள்ளோர் அனைவரும் சமைத்திருந்த பதார்த்தங்களை பரிமாறினார்கள். எல்லாம் மிக நேர்த்தியாக பக்குவம் ஆகி இருந்தது. அருகில் இருந்த சங்கரன் அனைத்தையும் நன்கு சாப்பிட்டான். ‘ஆஹா ஆஹா நன்றாக இருக்கிறது’ என அடிக்கடி சொல்லவேறு செய்தான்.

மாதவனுக்கோ ஒரே தர்மசங்கடமாய் இருந்தது. காரணம் என்னவெனில், அவன் ஸ்வீட் எடுத்து சாப்பிட்டபொழுதே, அவனுக்கு, அதில் பெரிய சுகந்த வாசனை அடித்தது. அப்படியே அவன் எதை எடுத்து சாப்பிட்டாலும், அதில் அதே வாசனை அடித்தது. நல்ல Scent வாசனை அடித்ததால், அவனால் ஒழுங்காக சாப்பிட முடியவில்லை. அவனுக்கு கணேஷ் வீட்டார் சமைக்கையில், ஏதோ ஒரு பொருளை தவறாக சேர்த்து விட்டனர் என்று நன்கு புரிந்தது. ஆனால் என்ன செய்வது? ஒன்றும் சொல்ல முடியவில்லை! ஏனெனில், சங்கரன் சப்பு கொட்டிக்கொண்டு சாப்பிட்டு கொண்டிருக்கிறானே! மாதவனுக்கு சங்கரனை பார்த்தால், சாப்பாட்டு ராமன் என தோன்றியது. ஒன்றும் பேசாமல் மௌனமாக சாப்பிட்டு முடித்த மாதவன் கை கழுவ சென்றான். கை கழுவி விட்டு கைக்குட்டையால் முகத்தை துடைத்தான். அப்பொழுது அவன் முகத்தில் குப்பென அதே வாசனை அடித்தது. ‘அட! இதென்ன நம் கைக்குட்டையில் வாசனை அடிக்கிறதே’ என பார்த்தால், அவன் கைக்குட்டையில் வாசனை வரவில்லை. மாறாக கைகளில் இருந்துதான் வந்தது. அவனுக்கு புரிந்து விட்டது.

‘ஆஹா! அலங்காரம் செய்து கொள்கையில் சுகந்த வாசனை பொருள் கையில் எஞ்சி, ஒட்டி இருக்கிறது. அதுதான் எல்லா சாப்பாட்டு வாசனைக்கும் காரணம்’ என புரிந்தது. சங்கரனிடமோ, கணேஷ் வீட்டாரிடமோ, பதார்த்தத்திலோ குறை இல்லை. மாறாக, தன் கையின் வாசனையினாலேயே, உணவில் குறை என தனக்குத் தோன்றியது என அவன் புரிந்து கொண்டான். அவனுக்கே

இப்பொழுது கொஞ்சம் வெட்கமாய் இருந்தது. திடீரென ஏதோ அவன் மனதில் பொறி தட்டியது. உடன் அவன் கலகலப்பாய் மாறி விட்டான். வீட்டில் உள்ளோர் சரி இல்லை என நினைத்தான் அல்லவா? தன் மனது சரி இல்லை என்பதால்தான், வீட்டில் உள்ளோர் எல்லாம் சரி இல்லை என தனக்கு தோன்றுகிறது என்று அவன் மனதில் பொறி தட்டியது. அப்படி பிறர் சரி இல்லை என தோன்றுவதற்கு காரணம், தன் மனதில் உள்ள வாசனையே என்பதையும் அவன் நன்கு புரிந்து கொண்டான்.

வீட்டிற்கு திரும்பிய மாதவன் தன் வீட்டாரிடம் மிக இனிமையாக பழக ஆரம்பித்தான். அதில் அவன் மனதின் நல்ல வாசனை வீசியது.

## சனாதனப்புதிர் பகுதி 76 - விடைகள் -ஆத்ரேயன்

1. கிருஷ்ணர் அவதரிக்கும்போது ருக்மிணியை மணம் புரிந்து ப்ரத்யும்னன் பிறப்பான். ப்ரத்யும்னந்தான் மன்மதன். (சிவ புராணம் - ருத்ர சம்ஹிதை - பார்வதி காண்டம் - அத் - 19)
2. இந்திரசாவர்ணி என்ற 14வது மனுவின் வம்சத்தில் பிறந்தவன்.
3. பத்மா.
4. வயோதிக பிராம்மணரான பிப்பலாத ரிஷி பத்மாவை திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்டார்.
5. சத்ய யுகத்தில் - 4கால்கள்; திரேதாயுகத்தில் - 3கால்கள்; துவாபர யுகத்தில் - 2கால்கள்; கலியுகத்தில் ஒரு காலுடன் இருக்கும்படி தர்மராஜனை சபித்தாள்.
6. வசிஷ்டர், கிரிராஜனான ஹிமவானுக்கும் அவனுடைய பத்னி மேனாவிற்கும், பார்வதியை சிவனுக்கு திருமணம் செய்து கொடுக்கும்படி சொல்லி, பிப்பலாதர் கதையை சொல்லுகிறார்.
7. கர்காசார்யர்.
8. மத்யந்தின ஸ்தோத்திரம் (யஜுர் வேதம்).
9. சரஸ்வதி, லக்ஷ்மி, சாவித்ரி, ஜான்ஹவி, அதிதி, இந்திராணி, லோபாமுத்ரா, அருந்ததி, அகல்யா, துளசி, ஸ்வாஹா, ரோகிணி, வசுந்தரா, சதரூபா, சஞ்சனா, ரதி.
10. யோகமார்க்கத்தால் வளர்ந்த அக்னியில் தன்னை சாம்பலாக்கி கொண்டாள்.

## சனாதனப்புதிர் பகுதி 76- <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. மன்மதனை எரித்த சிவனை, ப்ரம்மா முதலிய தேவர்கள் மறுபடி உயிர் பெற்று எழ வேண்ட, சிவன் என்ன பதில் அளித்தார்?
2. அனரண்யன் என்ற அசுரன் யாருடைய வம்சாவளியில் பிறந்தவன்?
3. அனரண்யனின் பெண்ணின் பெயர் என்ன?
4. பிப்பலாத ரிஷி அனரண்யனிடம் என்ன கேட்டார்?
5. பத்மா தன்னை பரிசோதிக்க மாறுவேடத்தில் வந்த தர்மராஜனுக்கு என்ன சாபம் கொடுத்தாள்?
6. அனரண்யன், பிப்பலாதர், பத்மா விருத்தாந்தத்தை யார் யாருக்கு சொல்கிறார்?
7. சிவன், பார்வதி விவாஹத்தில் யார் புரோஹிதர்?
8. கன்யாதானத்திற்கு பிறகு ஹிமவான் சிவனை பார்த்து எந்த ஸ்தோத்திரம் சொன்னார்?
9. சிவன் - பார்வதி விவாஹத்திற்கு வந்த 16முக்கிய பெண்மணிகள் யார்?
10. தக்ஷப்ரஜாபதியின் மகள், சிவனின் மனைவியான சதி, தன்னை எப்படி அழித்து கொண்டாள்?


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

**ஜுலை 24 - கருடாழ்வாரின் அவதார தினமான ஆடி ஸ்வாதியன்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி கோவிலில் ஸ்வாமி தரிசனம் செய்தார்கள். ஸ்ரீசாரங்கபாணி கோவில் சம்ப்ரோக்ஷணம் ஜுலை 13ஆம் தேதி நடைபெற்றது.**

**ஜுலை 27 - விட்டலாபுரம் ஸ்ரீ பாண்டுரங்கன் கோவிலில் ஆஷாட ஏகாதசியை முன்னிட்டு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் பாண்டுரங்கனுக்கு விசேஷ திருமஞ்சனமும், அன்பர்களுடன் நாமகீர்த்தனமும் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தம் திருக்கரங்களால், அன்பர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள்.**

**ஜுலை 14 - 21 ஸ்ரீசாந்தீபனி குருகுல டிரஸ்ட் பிரின்சிபால் ப்ரும்மஸ்ரீ பாலாஜி சர்மா, சென்னை ஆழ்வார்பேட்டை ஆஸ்திக சமாஜத்தில் பாகவத உபன்யாசம் செய்தார்.**

பாகல் ஹரநாத் எனும் மஹானிடம் அவருடைய அன்பர் ஒருவர், "ஐயனே ஆன்மீக அனுபவம் அதிகமில்லாதவர்களிடம் மிகப்பெரிய கூட்டம் அலை மோதுகிறது. ஆனால் உண்மையான மெய்ஞானம் அடைந்த உங்களை போன்ற மஹான்களிடம் மிகவும் சிலரே வருகின்றனர். இது மிகவும் வியப்பிற்குரியது அன்றோ!" என கேட்டார். அதற்கு அந்த மஹான், "மீன் கடையை நீ கவனித்தால், அங்கு மிகவும் சத்தமும் கூச்சலுமாக பெரும் கூட்டம் இருக்கும். ஆனால் தங்கமும் வைரமும் விற்கும் கடையை பார்த்திருக்கிறாயா? அங்கு கூட்டமும் குறைவாக இருக்கும்; கூச்சலும் குறைவாக இருக்கும்" என பதிலுரைத்தார்.

(-பாகல் ஹரநாத்தின் கடிதங்களிலிருந்து)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

*- ஜனனி*



## *ஸ்ரீஸுபலதாஸ் பாபாஜி*-2

ப்ராணக்ருஷ்ணதாஸ் பாபாவை தவிர, ஸ்ரீஜகதீஷதாஸ் பாபா மற்றும் பண்டித ராமக்ருஷ்ணதாஸ் பாபாவுடனும் ஸ்ரீஸுபலதாஸ் ஸத்ஸங்கம் செய்தார். இவர்களின் ஸங்கத்தில் ராதாக்ருஷ்ணர்களின் அஷ்டகால லீலா ஸ்மரணத்தில், அவருக்கு நாட்டம் ஏற்பட்டது.

அப்பொழுது அவர் லீலா சிந்தனம் செய்வதற்காக, எல்லா விதத்திலேயும் அனுகூலமாக உள்ள ஒரு ஏகாந்தமான இடத்தை தேடலானார். இதையே குறிக்கோளாக கொண்டு, சாது மண்டலியோடு வ்ரஜமண்டலத்தில் 84 கோஸங்களையும் வலம் வந்தார். ராதாகுண்டத்தை அடைந்ததும், இதுதான், தான் தேடி வந்த இடம் என்று அவருக்கு தோன்றிற்று. ஆனால், நந்தக்ராமம் சென்றபோது, அங்கிருந்த ஸ்ரீநித்யானந்ததாஸ் பாபா அவரை அங்கேயே தங்கி, பஜனை செய்யும்படி கூறினார். நித்யானந்ததாஸ் பாபாவுடன் தங்கலாம் எனும் ஆசையில், ஸுபலதாஸரும் ஸம்மதித்தார். மண்டலி மேலே சென்றது. சில நாட்கள் அங்கிருந்தபடியே பஜனை செய்தார். ஆனால் அவர் மனமோ, ராதாக்ருஷ்ணர்கள் நித்யம் சந்தித்து, மதுரமதுரமான லீலைகள் புரியும் ராதாகுண்டத்திலேயே குடி கொண்டிருந்தது. அங்கு ஷ்யாம குடீரத்தின் கரையில், ஒரு பாழடைந்த குடில் அவர் மனதை மிகவும் கவர்ந்திருந்தது. அவ்வளவு ஏகாந்தம், நித்யானந்ததாஸ் பாபாவின் ஆஸ்ரமத்தில் ஏது?

அதனால், அவர் ராதாகுண்டம் சென்று, அங்கிருந்த அந்த குடிலில் வஸித்துக் கொண்டு, பஜனை செய்யலானார். அவர் இரவும் பகலும், அந்த குடிலிலேயே அடைந்து கிடந்து ஒரே ஆஸனத்தில் அமர்ந்து கொண்டு, பஜனை செய்து கொண்டேயிருந்தார். சூரியன் காலையில் புறப்படும் முன், சௌசம் மற்றும் குண்டத்தில் ஸ்நானம் செய்வதற்கு வெளியே வருவார். அதே போல் சூரியன் அஸ்தமித்த பின்பு, ஒரு முறை மதுகரியின் பொருட்டு வெளியே வருவார். அந்த குடில் மனிதர்கள் வஸிப்பதற்கு துளியும் யோக்யதையில்லாத

அளவிற்கு சிதிலமடைந்திருந்தது. அதனால், அது எவ்வளவு நாட்களாக ஆள் புகாமலிருந்தது என்பது கூட தெரியாது. இக்காரணத்தினாலேயே, பாபாவிற்கு இந்த குடில் மிகவும் பிடித்திருந்தது. இங்கு ஏகாந்தத்திற்கு பஞ்சமேயில்லை; மேலும் மாயை தன் ப்ரபாவத்தை காண்பிக்க, இங்கு சற்றும் இடமில்லை. 12 வருடங்கள் வரை, எத்தனை கஷ்டங்கள் வந்த போதிலும், பாபா இந்த குடிலிலிருந்து விலகாமல், அங்கேயே பஜனை செய்து வந்தார். ஆனால், ப்ருந்தாவனத்தில் ஸாதுக்களின் ஸேவையில் ஈடுபட்டிருந்த ஒரு ஸகோதரியால், இவர் படும் கஷ்டத்தைக் கண்டு தாளமுடியவில்லை. அதனால் அவர் அந்த குடிலை புனருத்தாரணம் செய்து, பாபா வஸிக்கத் தகும்படி அமைத்துக் கொடுத்தார்.

சில நாட்களுக்குப் பின் ராதாகுண்டத்தில் ப்ளேக் பரவலாயிற்று. வ்ரஜவாசிகள் வீட்டை துறந்து, அங்கும் இங்கும் செல்லத் தொடங்கினர். அதனால் மதுகரிக்கு வழியே இல்லாமல் போயிற்று. அப்பொழுது பாபா ராதா குண்டத்திலிருந்து மூன்று-நான்கு மைல்கள் தொலைவிலிருந்த, பாலோர் எனும் க்ராமத்திற்குச் சென்று வசிக்கத் தொடங்கினார்.

ஒரு நாள் சூர்யாஸ்தமனத்திற்கு பிறகு, அவர் மதுகரிக்கு கிளம்பியபோது ஒரு வ்ரஜவாஸியின் வீட்டு வாசலில், 'ராதே ஷ்யாம்' என்று குரல் கொடுத்தார். ஒரு இளம்பெண் வீட்டிலிருந்து வெளியே வந்தாள். பாபாவை பிக்ஷைக்காக உள்ளே அழைத்தாள். பாபாவும் உள்ளே சென்றுவிட்டார். அப்பொழுது அந்த பெண் வீட்டில் தனியாக இருப்பது அறியாமல், அவர் உள்ளே சென்றுவிட்டார். பாபா உள்ளே நுழைந்ததும், அப்பெண் கதவை தாளிட்டு விட்டு, பாபாவை கெட்ட எண்ணத்துடன் நோக்கினாள். அவள் அப்படித் தன்னை பார்த்ததும், பாபாவின் கண்களிலிருந்து கண்ணீர் கங்கையைப் போல், பெருகி வழியத் தொடங்கியது. அதை பார்த்ததும், அப்பெண்ணின் மனதில் அக்கணமே மாற்றம் உண்டானது. ஆவேசம் வந்தவள் போல், பாபாவின் தலையில் கை வைத்து, அவள் ஏன் அழுகின்றீர்கள் பாபா! நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம்! நிச்சயம் ராதாராணி தங்கள் மேல் க்ருபை செய்வாள் என்று கூறினாள். இச்சம்பவத்திற்குப் பின்னர் பாபா பவ்ஸா எனும் க்ராமத்திற்குச் சென்று அங்கு தங்கினார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 141*

—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



நல்வாழ்வுக்கு காரணம் தருமத்தினின்றும் சிறிதும் மாறுபடாமல் இருத்தலே ஆகும். இன்றைய உலகம் சட்டத்திற்கு அஞ்சுகின்றதே அல்லாமல் தருமத்திற்கு அஞ்சவில்லை. தருமம் சட்டமாகலாம். சட்டம் எல்லாம் தருமம் ஆகா. 'விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்' ஆகிய அறநெறி, வேத்தின் ஓர் அங்கமாகிய ஸ்மிருதி நூல்களில் கூற பெற்றுள்ளன. இன்றைய சோஷலிஸம், கம்யூனிஸம் என்ற எல்லா இஸங்களும் ஸ்மிருதி நூல்களில் அமைந்தே உள்ளன. நமது ஒழுக்க நூல்களில் உள்ளனவற்றை முழுமையாக கடைப்பிடித்தாலே, ஆரோக்கியமான ஆனந்த மயமான மனித சமுதாயம் மலரும் என்பதில் ஐயம் இல்லை.

இதனையே பரிபாடல் இரத்தின சுருக்கமாக 'அறத்தில் த்ரியா பதி' என்று குறிப்பிட்டது புறநானூறு.

*பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்*
*நால் வேதம் நெறிதிரியினும்*
*திரியா சுற்றம்*

என்று அரசு அதிகாரிகளை குறிப்பிடுகிறது. வேதமே நன்னெறியில் மாறினாலும், அரசாங்க அதிகாரிகள் சிறிதும் முறை பிறழமாட்டார்கள் என்பதே வருங்கால வைப்பு நிதியாக நமக்கு புறநானூறு காட்டுகிறது.

அறநெறி பிறழாது வேதம் காக்கும் அந்தணர்களை காட்டி மேலே செல்கிறார்.

*ஆங்கு ஒருசார் - உண்ணுவ, பூசுவ,பூண்ப, உடுப்பவை*
*மண்ணுவ, மணிபொன் மலைய, கடல்*
*பண்ணியம், மாசு அறு பயம் தரு காருகப்*
*புண்ணிய வணிகர் புனைமறுகு ஒருசார்*

அம்மதுரை நகரின் ஒருபக்கத்தில் உண்ணும் பொருள்கள், பூசும் பொருள்கள், அணிந்து கொள்ளும் பொருள்கள், உடுத்துக் கொள்ளும் ஆடை முதலிய

பொருள்கள், கழுவுவதற்குரிய வாசனை பொருள்கள், மணிகள், பொன், மலையிலிருந்து வருவன, கடலிலிருந்து வரும் பண்டங்கள், நுகர்பொருள்கள் (பலகாரம், சோறு, தின்பண்டம்) முதலிய குற்றமற்ற பயன்படு பொருள்களைத் தருகின்ற செயலையுடைய அறமுறைப்படி நடக்கின்ற வணிகர்களது வீதி உள்ளது.

*விளைவதை வினை எவன் மென்புல வன்புலக்*

*களமர் உழவர் கடி மறுகு பிறசார்;*

*ஆங்கே அனையவை நல்ல நனிகூடும் இன்பம்*

இயல் கொள நண்ணியவை - மென்புலமாகிய மருதம், நெய்தல் ஆகிய நிலங்களிலும், வன்புலமாகிய குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்களிலும், வேளாண்மை ஆகிய வினைசெய்து விளைவித்துத் தரும் களமரும், உழவரும் வாழ்கின்ற காப்பமைந்த வீதிகள் அமைந்துள்ளன. இப்படிப்பட்ட நல்லனவாகிய இன்பங்கள் மிக கூடப்பெற்று ஒழுங்கும் சிறப்பும் பொருந்த நெருங்கி அமைந்துள்ள வீதிகளை உடையதாக நகரம் உள்ளது. (தொடரும்)


love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

# Spend Rs. 7/-* a day and protect your entire family with Swastham Health Card!!!




**Subscribe to Swastham Health Card for a period of 1 year and avail discounts ranging from 5 – 40 % at our affiliated healthcare providers.**

## FEATURES

- Swastham Health Card is not an insurance plan
- No age limit to use this card
- No restriction on pre-existing illnesses
- Caters to medical and non – medical expenses
- Unlimited benefits from a single card for the whole family
- No additional processing time for use
- Quality services from all providers at your convenience

**To know more details call 9092 800 900, Monday to Sunday, 9 am to 9 pm**

**Visit us at www.swasthamhealthservices.com**

Swastham Health Services Pvt Ltd

II Floor, 29 A, ARK Colony, Eldams Road, Alwarpet, Chennai – 600 018

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | ஆகஸ்டு 10, 26 செப்டம்பர் 9, 24<br>August 10, 26 September 9, 24 |
| ஆகஸ்டு 2 | கோவிந்தபுரம் யோகிராம்சுரத்குமார் நாமாஸ்ரமம் பிரதிஷ்டா தினம் |
| செப் 5 - 14 | மதுரபுரி ஆஸ்ரமத்தில் கோகுலாஷ்டமி உற்சவம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**